# யூன் – 26 - திங்கள்

## புனித யோவான் மரியா

**“உன்னை நான் பெரிய இனமாக்குவேன், உனக்கு ஆசி வழங்குவேன், உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய்’’ (தொ.நூல்12:2)**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 12 : 1 – 9

ஆண்டவர் ஆபிராமை நோக்கி, ”உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன் உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன் உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன் உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்” என்றார். ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார். ஆபிராம் ஆரானைவிட்டுச் சென்றபொழுது அவருக்கு வயது எழுபத்தைந்து. ஆபிராம் தம் மனைவி சாராயையும் தம் சகோதரன் லோத்தையும் உடனழைத்துச் சென்றார். அவர்கள் ஆரானில் சேர்த்திருந்த செல்வத்துடனும், வைத்திருந்த ஆள்களுடனும் கானான் நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று அந்நாட்டைச் சென்றடைந்தனர். ஆபிரகாம் அந்நாட்டில் நுழைந்து செக்கேமில் இருந்த மோரேயின் கருவாலி மரத்தை அடைந்தார். அப்பொழுது கானானியர் அந்நாட்டில் வாழ்ந்து வந்தனர். ஆண்டவர் ஆபிராமுக்குத் தோன்றி, ”உன் வழிமரபினர்ககு இந்நாட்டைக் கொடுப்பேன்” என்றார். ஆகவே தமக்குத் தோன்றிய ஆண்டவருக்கு அங்கே அவர் ஒரு பலிபீடத்தை எழுப்பினார். ஆபிராம் அங்கிருந்து புறப்பட்டு, பெத்தேலுக்குக் கிழக்கே இருந்த மலைப்பக்கம் சென்று பெத்தேலுக்கு மேற்கே ஆயிக்குக் கிழக்கே கூடாரம் அமைத்துக் குடியிருந்தார். அங்கே ஆண்டவருக்கு அவர் ஒரு பலிபீடத்தை எழுப்பி ஆண்டவரது திருப்பெயரைத் தொழுதார். இவ்வாறு ஆபிராம் படிப்படியாக நெகேபு நோக்கிப் பயணம் செய்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்

## நற்செய்தி : மத்தேயு 7 : 1 – 5

அக்காலத்தில் இயேசு கூறியது: பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும். உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? அல்லது அவரிடம், ”உங்கள் கண்ணிலிருந்து துரும்பை எடுக்கட்டுமா?” என்று எப்படிக் கேட்கலாம்? இதோ! உங்கள் கண்ணில்தான் மரக்கட்டை இருக்கிறதே! வெளிவேடக்காரரே, முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும“ என்றார்.

**தியானம்:** கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் நாம் உயர்த்தப்படுவோம் என்பதனை இன்றைய முதல் வாசகம் எமக்கு தெளிவுபடுத்துகின்றது. “நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்” (தொ.நூ.12:1) ஆபிரகாம் ஆண்டவரைப் பார்த்து எதுவுமே கேட்கவில்லை ஆனால் அவர் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தார். ஆதலால் கடவுள் அவரை ஒரு இனத்தின் தலைவராக ஏற்படுத்தினார். அவர் வழிவந்த நாமும் இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், ஆசி பெற்றவர்கள் அப்படிப்பட்ட நாம் பிறரை குற்றவாளிகள் எனத் தீர்ப்பிடுவது எந்த விதத்தில் கடவுளுக்கு உகந்த செயலாக இருக்க முடியும் என்ற கேள்வி இன்றைய நற்செய்தி வாயிலாக எம் ஒவ்வொருவரிடமும் கேட்கப்படுகின்றது. முதலில் உன்னையே நீ திருத்திக்கொள், உனக்குள் இருக்கின்ற கோபம், அகங்காரம், சுயநலம், போட்டி மனப்பான்மை போன்ற தீய குணங்களை அகற்றிவிடு, பின்பு உன் சகோதரனிடம் உள்ள சிறு குறைகள் உனக்கு தெரியாமல் போய்விடும் என்பதை நற்செய்தி நமக்கு தெளிவு படுத்துகின்றது. எனவே நமது குறைகளை களைந்து மற்றவர்களைத் தீர்ப்பிடாது மாறாக அன்பு செய்வோம் அப்போது நாமும் கடவுளின் அன்பைப் பெற்றுக்கொள்வோம்.